செய்தி வெளியீடு எண் : 688 நாள் : 11.04.2023

**கிண்டி கிங் நிறுவன வளாகத்தில் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுமானப் பணிகளை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்தார்கள்.**

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் இன்று (11.4.2023) கிண்டி கிங் நிறுவன வளாகத்தில் கட்டப்பட்டு வரும் **"அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை"** ஆய்வு செய்தார்கள்.

ரூ.230 கோடி மதிப்பீட்டில், 4.89 ஏக்கர் நிலப்பரப்பில் தரைத்தளம் மற்றும் 6 தளங்கள் உடையதாக, 1000 படுக்கைகளுடன்கூடிய இந்த மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. 1.4.2022 அன்று தொடங்கிய இந்த மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள், 15.5.2023க்குள் கட்டி முடிக்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், இன்று ஆய்வு மேற்கொண்டபொழுது, இதுவரை தரைத்தளத்தில், 75 சதவீதப் பணிகள் நிறைவுற்றுள்ளதையும், தரை அமைக்கும் பணிகளும், அவசர அறுவைச் சிகிச்சை அரங்கம் அமைக்கப்பட்டு வரும் பணிகளும், ஜன்னல் கம்பிகள் பொருத்தும் பணிகளும், மருத்துவ வாயு குழாய்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு, இப்பணிகள் அனைத்தையும் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிக்குமாறு, அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வின்போது, மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., மருத்துவக்கல்வி இயக்குநர் டாக்டர் இரா.சாந்திமலர், பொதுப்பணித்துறை சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு.க.ஆயிரத்தரசு ராஜசேகரன், சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் திரு.தா.மோகன்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in